

திருவேற்காட்டில் திமுக அரசின் சாதனைகளைக் கூறி வீதி வீதியாக ஆவடி தொகுதி வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கும்போது ஏராளமான பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள்.

### திருவேற்காட்டில் தி.மு.க. அரசின் சாதனைகளைக் கூறி வீதி வீதியாக

# ஆவடி தொகுதி வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு!

## ஏராளமான பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள்!

திருவள்ளூர், ஏப்.11;

ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேற்காட்டில் திமுக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வீதி வீதியாக சென்று தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

ஆவடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திமுக சார்பில் வேட்பாளராக அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் களம் காண்கிறார். தொகுதி முழுவதும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் அவர் நேற்று நகரச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி தலைமையில் திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட 1, 2, 11, 12, மற்றும் 13வது வார்டு பகுதிகளில் வீதி வீதியாக சென்று பொது மக்களிடம் வாக்குகள் சேகரித்தார். அப்போது வார்டு செயலாளர்கள் பி.வி.கே. கண்ணன், சத்தியகிரி, இளங்கோவன், குமார், கெஜா, ஆகியோர் வரவேற்பில் பிரமாண்ட உற்சாகமாக வரவேற்றனர்கள்

வாக்கு சேகரிப்பின் போது அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் பேசியதாவது:

இந்த ஆட்சியில் நம் திராவிட மாடல் முதலமைச்சர் சொன்னதையும், சொல்லாததையும் செய்துள்ளார். பெண்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்பதற்காக சொத்தில் சம உரிமை என்பது திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு லட்சம் பேருக்கு மேல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. விடியல் பயணத்தில் இரண்டு கோடியே 16 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கு சதி திட்டம் தீட்டினார்கள். ஆனால் அதை முறியடித்து 3 மாத மகளிர் உரிமைத்தொகை மற்றும் கோடைக்கால ஊக்கத் தொகை என ரூ. 5 ஆயிரம் வழங்கினார். இந்த ஆட்சியில் பெண்களுக்காக ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டு பெண்கள் ஒவ்வொருவரையும் தனது சகோதரியாக நினைத்து முதலமைச்சர் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

திருவேற்காடு நகராட்சியில் ரூ.510.63 கோடி மதிப்பில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப் படுகிறது. ரூ.110 கோடி மதிப்பீட்டில், திருவேற்காடு நகராட்சிக்கு, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியம் மூலம் குடிநீர் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது.

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலில் ரூ.87 கோடி மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது. மக்களுக்கான நல்ல திட்டங்கள் தொடர்வதற்கு, மீண்டும் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக தொடர்வதற்கு இந்த தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் எனக்கு வாக்களித்து மாபெரும் வெற்றி பெறச் செய்யுமாறு இருகரம் கூப்பி கேட்டு கொள்கிறேன் என்றார் அவர்.

இந்த பிரச்சாரத்தில் பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ. ஜெ.பவுல், தேமுதிக மாநகர செயலாளர் ந.மு.ந.சங்கர், காங்கிரஸ் நகர தலைவர் சாந்தராமன்,

தேமுதிக நகர செயலாளர் மகேந்திரன், விசிக நகர செயலாளர் ஆசிர்வாதம், மணிமாறன், மதிமுக நகர செயலாளர் பார்த்திபன், கம்யூனிஸ்ட் நகர செயலாளர் மனோகரன், திமுக நகர நிர்வாகிகள் பெனியமின் , அ.க. நடராஜ், வெ.குமாரசாமி, அரசுபானு, ஜெ.சரவணன், செல்வதுரை, ஜோதிநாதன், பாண்டுரங்கன்,

வட்ட செயலாளர்கள் பி.உமாபதி, பொன்.மனோகரன், துரைகோபால், கே.பி. எஸ்.சுதாகர், பிரதானம், தெய்வசிகாமணி, ம.விநாயகம், என்.ராஜி, ரங்கதுரை, பரிசமுத்து, பன்னீர்செல்வம், சாது, ஜெகன், ஜேக்கப், ஆசைத்தம்பி, இம்மானுவேல், நித்தீஷ், அலேக்ஸ், இளைஞரணி நிர்வாகிகள் மா.அப்பு(எ) ஜெபராஜன், ஆ.நாராயணன்,எம்.சுரேஷ், நரேஷ், குடியரசு, ஜான், பிரபு, முருகன், மனோஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அண்ணநகர் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு நேற்று (10.04.2026 – வெள்ளிக்கிழமை) அண்ணாநகர் வடக்கு பகுதி, 102வது வட்டத்தில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம்.கே.மோகன், எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் ச.பரமசிவம், தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், வட்டக்கழக செயலாளர் பி.சந்திரசேகர், தோழமை கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து

# மயிலை கிழக்கு பகுதி 126வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை!

சென்னை, ஏப். 11-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி 126வது வட்டத்தில் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பு இன்று (11.04.2026 - சனிக்கிழமை) நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2,BDO,BDA மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாக்கு சேகரிக்கும் இடங்கள் : காலை 7.00 மணியளவில் ஆண்டி மானிய தோட்டம், சிவராமன் தெரு, சீனிவாசன் தெரு, திருவள்ளுவர் பேட்டை, ஜெத் நகர், வன்னியம்மதி எஸ் சி பி மற்றும் வன்னிய மதி தெரு, பெருமாள் கோவில் தோட்டம், வேங்க திருவேங்கடம் தெரு, போலீஸ் கோட்டர்ஸ், அன்னை நாகமணி தெரு மற்றும் அண்ணாதுரை தெரு, அருணகிரி தெரு மற்றும் மாரி செட்டி தெரு

மாலை 4.00 மணியளவில் பவானி குப்பம், நம்பிக்கை நகர், ராஜீவ் காந்தி நகர், முல்லை மாநகர், லீத் கேஸ்டில், போர்ஷோர் எஸ்டேட், லாசரஸ் சர்ச், கனக ராயன் மலையப்பன் தெரு, ஜோனகன் தெரு, பெரிய பள்ளி தெரு, பெரிய காரக்குட்டை அனைத்து தெருக்கள்

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி அறிக்கை விடுத்துள்ளார்.

### தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026 மதுரை மாநகர் மாவட்டம்

# மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், மதுரை மத்திய சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள் செம்மையாக நடைபெற்றிட தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**மதுரை மத்திய தொகுதி தேர்தல் பணிக்குழு**

தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - ஆர். கோபால கிருஷ்ணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

மா. ஒச்சுபாலு, மாவட்ட அவைத் தலைவர்

மா. ஜெயராம், தலைமை செயற்குழு உறுப்பினர்

சி. சின்னம்மாள், மாவட்ட துணைச் செயலாளர்

ஆர். சௌந்தரராஜன், இளைஞர் அணி அமைப்பாளர்

எம். பிரம்மநாயகம், பொதுக்குழு உறுப்பினர்

எம்.ஜி. முத்துகணேசன், பொதுக்குழு உறுப்பினர்

பி.டி. மணிமாறன், பொதுக்குழு உறுப்பினர்

மிசா எம். பாண்டியன், முன்னாள் துணை மேயர்

ஏ. மாணிக்கம், முன்னாள் மண்டலத் தலைவர்

என். சிவக்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்

எஸ்.சேக் இஸ்மாயில், சிறுபான்மையினர் நலஉரிமைப்பிரிவு துணைச் செயலாளர்

கொடைவீடு எஸ்.எம்.ஆர்.அருண்குமார், முன்னாள் மாமன்ற உறுப்பினர்

எஸ்.எஸ்.மாறவர்மன், ஆரப்பாளையம் பகுதிச் செயலாளர்

என். நீலமேகம், தத்தனேரி பகுதிச் செயலாளர்

எம். சரவண பாண்டியன், சிம்மக்கல் பகுதிச் செயலாளர்

பி.கே. செந்தில், எல்லிஸ் நகர் பகுதிச் செயலாளர்

சு.பா. கண்ணன், மேலமாசி வீதி பகுதிச் செயலாளர்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10.04.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மயிலை கிழக்கு பகுதி தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப்.11-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து உதயசூரியனுக்கு வாக்கு சேகரிப்பு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி மற்றும் 171 அ வட்டச் பா.பொன்னுசாமி, மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் அறிவுறுத்தலின் படி மயிலை கிழக்கு பகுதி தி.மு.க மாணவர் அணி சார்பில் இன்று (11.4.2026) மாலை 5 மணியளிவில் வீடு வீடாக சென்று பிரச்சாரம் நடைபெறுகிறது.

இதில் பி.ஆர்.மோகன் ராஜ், ரா.ராக்கேஷ், மு. திலிப் குமார், கோ. மணிகண்டன், ஏ.விஷால், ச.பிரேம்குமார், ரா.மணிகண்டன், சா. சுவாதிநாத், ஆகியோர் வரவேற்கின்றனர்.

எனவே மயிலை கிழக்கு பகுதி மாணவர் அணி மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறோம்.

இடம்: ராஜகிராமணி தோட்டம், சாலை தெரு, அப்பாவு கிராமணி தெரு

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் ஏ. கோகுலகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி, தெற்கு பகுதியில் உள்ள 33வது வார்டு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் தெற்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம்சட்டமன்றதொகுதி, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராகிய மாதவரம் எஸ்.சுதர்சனம், முன்னாள் மாவட்ட பிரதிநிதி ஜி. நாராயணமூர்த்தி 16ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, பஜார் தெருவில் உள்ள மாநகராட்சி அலுவலகம் அருகில் அவரது புகைப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்ட துணை செயலாளர் டி.இராமகிருஷ்ணன், மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர்

# சு.சுப்பிரமணியன் சுத்தமல்லி விலக்கில் - கழக அரசின் சாதனைகளைக் கூறி வாக்கு சேகரித்தார்!

## பெண்கள் உற்சாக வரவேற்பு!

நெல்லை.ஏப்.11.

நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளருமான சு.சுப்பிரமணியன் சுத்தமல்லி விலக்கில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து அவரது சொந்த ஊரான சுத்தமல்லியில் பிரச்சாரம் மேற்கொண்ட போது அங்கு அவருக்கு உற்சாகமான,எழுச்சியான, மிகவும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சு.சுப்பிரமணியன் நெல்லை தொகுதிக்கு உட்பட்ட மானூர் தெற்கு ஒன்றியம் சுத்தமல்லி விலக்கில் கழக அரசின் 5 ஆண்டு சாதனைகளை விழா வாரியாக எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து திராவிட மாடல், முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் தேர்தல் அறிக்கைகள் ஒவ்வொன்றாக பதாகைகளை கையில் ஏந்தியபடி எடுத்துக் கூறினார்.குறிப்பாக இல்லத்தரசி திட்டம் ரூபாய் 8000 கூப்பன் பதாகையை அவர் தூக்கிப்பிடித்து காட்டியதும் அங்கு கூடியிருந்த பெண்கள் அதை பார்த்ததும் உற்சாகமாக கைதட்டி தங்கள் ஆதரவை மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். பொதுமக்களின் குறைகளை உடனடியாக நிறைவேற்றும் அடிப்படையில் இங்கு பொது மக்களின் நலன் கருதி நெல்லை சட்டமன்ற தொகுதியின் கிளை அலுவலகம் திறக்கப்படும் என்றார்.

பின்னர் கழக வேட்பாளர் சு. சுப்பிரமணியன் தனது சொந்த ஊரான சுத்தமல்லியில் ஏ.கே.தெரு,கோவில் பத்து,வ.உ.சி.நகர்,முப்பிடாதிஅம்மன் கோவில் தெருபெரியார் நகர், ஆகிய தெருக்களுக்கு சென்று வாக்காளர்களை சந்தித்து தீவிர வாக்கு சேர்க்கும் பணியில் ஈடுபட்டார்.அங்கு அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கொண்ட நகரம் அம்பலம் கொண்ட நகரம்ரோஸ் கார்டன் எக்ஸ்டன்சன் ஏரியா, சங்கன் திரடு, தெற்கு சங்கன் திரடு, வடக்கு சங்கன் திரடு, பாரதியார்புரம், மேலக்கல்லூர், முப்புடாதி அம்மன் கோவில் தெரு,ஜெ. ஜெ.நகர், கோடகநல்லூர் சி.ஆர். காலனி, நடுக்கல்லூர், கோடகநல்லூர், கீழகல்லூர், பட்டன் கல்லூர், பழுவூர்பட்டன்கல்லூர், பழவூர்எம்ஜிஆர் நகர் ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டார்.

முன்னதாக நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் ப்ரூஸ் பங்கேற்று நெல்லை தொகுதி வேட்பாளர் சுப்பிரமணியனுக்கு சுத்தமல்லி விளக்கில் உதயசூரியன் சின்னத்திற்கு அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினரும் நெல்லை தொகுதி பார்வையாளருமான பேச்சிபாண்டியன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பொதுக்குழு உறுப்பினர் துணை மேயர் ராஜ்,ஒன்றிய செயலாளர் மாரியப்பன்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி,மாமன்ற உறுப்பினர் உலகநாதன், சுத்தமல்லி கிளைச்செ யலாளர் அருணாசலம் பிள்ளை, நெல்லை மாநகர அயலக அணி அமைப்பாளர் செந்தில் உள்பட கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# விராலிமலை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு நியமனம்

நடைபெறவிருக்கின்ற சட்டப்பேரவைத் தேர்தலில், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிகளை கவனித்திட "தொகுதி தேர்தல் பணிக்குழு" பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விராலிமலை தொகுதி தேர்தல் பணிக்குழு**

பரணி கார்த்திகேயன் (தேர்தல் பணிக்குழுச் செயலாளர்)

எஸ். திருஞானசம்பந்தம் (மூத்த வழக்கறிஞர்)

முனைவர் செ. குறிஞ்சிவாணன்

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 10.4.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடம் கழக வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி திருவள்ளூர் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வதட்டூர், கோடம்பாக்கம், ஆயலூர் கிளாம்பாக்கம் ஆகிய பகுதிகளில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெய்சீலன் தலைமையில் உதயசூரியன் சின்னத்திற்கு வீடு வீடாக சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது கழக நிர்வாகிகள் மலர் தூவி ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள் உடன் மாவட்ட துணை செயலாளர் வெங்கல் வி.ஜெ.சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், சாமுண்டீஸ்வரி சன்முகம், தரணி, டி.கே.சீனிவாசன், டி.எம்.ராமசந்திரன், டி.டி.தயாளன், பரமேஸ்வரன், ஒன்றிய தேர்தல் பாதையாளர்கள் டி. குமரேசன், சாய் மோகன், எஸ்.சௌந்தர்ராஜன், த.சுகுமார், ஆயலூர் வெங்கடேசன், ஸ்ரீதர், உள்பட ஒன்றிய நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரிப்பின் போது உடனிருந்தனர்.



சென்னை திருவொற்றியூர் கிழக்கு பகுதியில் பெரியார் நகரில் பொதுமக்களிடமும், வணிகர்களிடமும் வீடு வீடாக சென்று மதச்சார்பற்ற முற்பாக்கு கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி வேட்பாளர் எல்.சுந்தரராஜனை ஆதரித்து தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் வாக்கு சேகரித்தனர். உடன் 8வது வட்டக் கழகச் செயலாளர் டி.சி.வி.மணிகண்டன், மாவட்ட கழகப் பிரதிநிதி ஒய்.ரஜினி நந்தி, ஏ.அருளானந்தம், சுகந்தாமுனுசாமி, கணேசன், சீனிவாசன், அபூபக்கர் சித்திக், அரங்கநாதன், ஆர்.எம். மணிகண்டன், பாப்பா ராமமூர்த்தி மற்றும் பல கழக முன்னணியினர் கூட்டணி கட்சி நண்பர்கள் அன்பு, பாக்கியம் ஆகியோர் உடன் இருந்தனர்.